# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## *2024 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடு (திருத்தச்) சட்டம்*

---

[*2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 20 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது*]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2024, மாச்சு மாதம் 22 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *12.00***          **தபாற் செலவு : ரூபா *150.00***

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2024 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடு (திருத்தச்) சட்டம்**

[*2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 20 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*]

*ச.வ.- ஒ. 70/2023*

**2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

**1.** இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்*

*2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கச் சட்டத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**2.** (இதனகத்துப்பின்னர், "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டுச் சட்டத்தின் 4 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுக:-

"*4.* (1) இரண்டாம் பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவொரு வரிவிதிக்கப்படற்பாலவரான ஆள் தவிர்ந்தவரும், (இச்சட்டத்தில், "வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாடு" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் செயற்பாட்டைக் கொண்டுநடாத்துகின்றவரும் அல்லது நிறைவேற்றுக்கின்றவருமான ஒவ்வொரு வரிவிதிக்கப்படற்பாலவரான ஆளும்-

(அ) இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தேதிக்கு நேர் முன்னரான பன்னிரெண்டு மாத காலப்பகுதியினுள் எந்த வரிவிதிக்கப்படற்பாலவரான ஆளின் மொத்த விற்பனை வரவின் கூட்டுமொத்தம் நூற்றியிருபது மில்லியன் ரூபாவை விஞ்சியதோ அந்த வரிவிதிக்கப்படற்பாலவரான ஆளின் விடயத்தில், இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குப் பிந்தாமல்;

(ஆ) *2024*, சனவரி *1* ஆந் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் காலாண்டுக்கான, எந்த வரிவிதிக்கப் படற்பாலவரான ஆளுக்குப் பந்தி (அ) ஏற்புடையதாவ தில்லையோ அந்த வரிவிதிக்கப்படற்பாலவரான ஆளின் விடயத்தில், ஒரு காலாண்டுக்கான மொத்த விற்பனை வரவின் கூட்டுமொத்தம் எத்தேதியன்று முப்பது மில்லியன் ரூபாவை விஞ்சுகின்றதோ அல்லது விஞ்சக்கூடிய சாத்தியமுள்ளதோ அத்தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குப் பிந்தாமல்;

(இ) *2024*, சனவரி *1* ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் காலப்பகுதிக்காக, ஒரு காலாண்டுக்கான மொத்த விற்பனை வரவின் கூட்டுமொத்தம் எத்தேதியன்று பதினைந்து மில்லியன் ரூபாவை விஞ்சுகின்றதோ அல்லது விஞ்சக்கூடிய சாத்தியமுள்ளதோ அத்தேதியிலிருந்து அல்லது தொடர்ச்சியான நான்கு காலாண்டு காலப் பகுதியொன்றிற்கான மொத்த விற்பனை வரவின் கூட்டுமொத்தம் எத்தேதியன்று அறுபது மில்லியன் ரூபாவை விஞ்சுகின்றதோ அல்லது விஞ்சக்கூடிய சாத்தியமுள்ளதோ அத்தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குப் பிந்தாமல்,

குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் (இச்சட்டத்தில், "ஆணையாளர் தலைமையதிபதி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) உண்ணாட்டர சிறை ஆணையாளர் தலைமையதிபதிக்கு அத்தகைய நோக்கத்துக் காக விண்ணப்பமொன்றைச் செய்வதன்மூலம் இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்:

ஆயின், எவ்வரிவிதிக்கப்படற்பாலதான ஆள் ஒருவருக்கு பந்தி (இ) ஏற்புடையதாகின்றதோ அவ் வரிவிதிக்கப்படற்பாலதான ஆள் இத் (திருத்தச்) சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குப் பிந்தாமல் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அத்தகைய நோக்

கத்திற்காக விண்ணப்பமொன்றை அத்தகைய ஆள் செய்திருப்பின், இவ்வுட்பிரிவின்கீழ் பதிவுசெய்தல் தேவைப்பாட்டுடன் இணைங்கியொழுகி இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்*

(1) அதன் (அ) என்னும் பந்தியில், "நிறைவேற்றாதொழிந்துள்ளவிடத்து; அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நிறைவேற்றாதொழிந்துள்ளவிடத்து;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அதன் (ஆ) என்னும் பந்தியில், "இயைபான காலாண்டின் நேர்முற்போந்த ஒவ்வொரு நான்கு காலாண்டுகளின் போதும் அத்தகைய பதிவு செய்யப்பட்ட ஆளின் கூட்டுமொத்தமான மொத்த விற்பனைவரவு நூற்றியிருபது மில்லியன் ரூபாவை விஞ்சாதவிடத்து," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2024, சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னர் இயைபான காலாண்டின் நேர்முற்போந்த ஒவ்வொரு நான்கு காலாண்டுகளின் போதும் அத்தகைய பதிவுசெய்யப்பட்ட ஆளின் கூட்டுமொத்தமான மொத்த விற்பனைவரவு நூற்றியிருபது மில்லியன் ரூபாவை விஞ்சாதவிடத்து; அல்லது" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அதன் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வருவதனை சேர்ப்பதன் மூலமும்:-

"(இ) 2024, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் காலப்பகுதிக்காக தொடர்ச்சியான நான்கு காலாண்டு காலப் பகுதியொன்றிற்காக, அத்தகைய பதிவுசெய்யப்பட்ட ஆளின் கூட்டுமொத்தமான மொத்த விற்பனைவரவு அறுபது மில்லியன் ரூபாவை விஞ்சாதவிடத்து,".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**4.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.